2010 மே 11]

166—

தரம் உயர்த்துதல்

***48612—திரு. இ. மகேந்திரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், கே. பெருமாள்பட்டி அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

உசிலம்பட்டி தொகுதி, கே. பெருமாள்பட்டி அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளியில் மிகக் குறைந்தளவே மாணவ, மாணவியர்கள் உள்ளதால் இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த சாத்தியக்கூறு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன்.*

திரு. இ. மகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், கே. பெருமாள்பட்டியிலே இருக்கின்ற அரசு உயர்நிலைப் பள்ளியில் 53 மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கின்றார்கள். அந்தப் பள்ளி மிகவும் பிற்பட்ட பகுதியிலே இருக்கின்ற பள்ளியாகும். அங்கேயிருந்து மேல்நிலைக் கல்வி பயிலுவதற்கு மாணவர்கள் 25 கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கின்ற விக்கிரமங்கலம் அல்லது 40 கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கின்ற செக்கானூரணி அல்லது உசிலம்பட்டி சென்றுதான் படிக்கின்ற நிலைமை இருக்கின்றது. அதனால் அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற மாணவர்கள் மேற்படிப்பு படிக்க முடியாத நிலைமை உருவாகிக் கொண்டிருக்கின்றது. அந்த மாணவர்களுடைய நலன் கருதி, அதை அரசு மறுபரிசீலனை செய்து, அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்துவதோடு, அதே உசிலம்பட்டியிலே பூச்சிப்பட்டி, வகுரூரணி ஆகிய பகுதிகளிலும் 45 மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கின்றார்கள். அந்தப் பூச்சிப்பட்டி பள்ளியை அரசு*

மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி அங்கு ஒரு மாணவர் விடுதியையும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பள்ளியைத் தரம் உயர்த்துவதற்கு பள்ளிக் கல்வித் துறையிலே ஒரு வரையறை வைத்திருக்கிறார்கள். ஒரு பள்ளியைத் தரம் உயர்த்துவதற்கு 10 ஆம் வகுப்பிலே 100 மாணவர்கள் படித்தால்தான் தரம் உயர்த்த வேண்டுமென்று ஒரு வரையறை இருக்கின்றது. அந்த வரையறைக்குள்ளே அந்தப் பள்ளி வரவில்லை. இருந்தாலும், அந்தப் பகுதியினுடைய பிற்பட்டச் சூழ்நிலையை மனதிலே வைத்துக்கொண்டு, அதற்கு என்ன செய்ய முடியுமோ அந்தப் பணியை அரசு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன்.

திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களிலே இருக்கின்ற கள்ளர் பள்ளிகளுக்கு இரண்டு ஆண்டுகளாக மாணவர்களுடைய அந்தச் சிறப்புக் கட்டணம் இன்னும் அரசிடமிருந்து செலுத்தப்படவில்லை. அதனால் அந்தப் பள்ளிகளை நடத்துவதிலே சிக்கல் இருப்பதாக அங்கேயிருக்கின்ற தலைமை ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றார்கள். இதுகுறித்து அரசு உடனே ஆவன செய்து அந்தக் கட்டணத்தைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் கள்ளர் சீரமைப்புத் துறை அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. கள்ளர் சீரமைப்புத் துறை ஆங்கிலேயர் காலத்தில் Kallar Common Fund என்கிற Fund–லிருந்து அமைக்கப்பட்டது. அந்தத் துறையிலே கடந்த காலங்களிலே அங்கே இருக்கின்ற பள்ளிகளில் ஆசிரியர்களை நியமனம் செய்கிறபோது, பிறமலைக் கள்ளர் சமுதாயத்திலே இருக்கின்ற ஆசிரியர் பயிற்சி முடித்த மாணவர்களை மட்டும்தான் நியமனம் செய்து வந்தார்கள். இப்பொழுது பல்வேறு பிரிவைச் சார்ந்த ஆசிரியர் பயிற்சி

2010 மே 11]

முடித்தவர்களை அந்தக் கள்ளர் சீரமைப்புத் துறையின் பள்ளிகளிலே நியமனம் செய்கிறார்கள். கடந்த காலங்களிலே பிறமலைக் கள்ளர் சமுதாயத்தைச் சார்ந்த, பயிற்சி முடித்த மாணவர்களை மட்டும் நியமனம் செய்ததைப்போல, வருகின்ற காலங்களிலேயும் அங்கே இருக்கிற ஆசிரியர் பயிற்சிக் காலியிடங்களில், பிறமலைக் கள்ளர் சமுதாயத்தைச் சார்ந்த மாணவர்களை மட்டும் நியமனம் செய்வதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதுபோல நிதி வரவில்லை என்று சொன்னால், அரசாங்கம் உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுக்கும். பள்ளிகளிலே ஆசிரியர்களை நியமனம் செய்வதைப் பொறுத்தவரையில், Secondary Grade Teacher, கள்ளர் வகுப்பைச் சார்ந்தவர்களைத்தான் நியமித்துக் கொண்டிருக்கின்றோம். P.G.–ஆசிரியர்களை மட்டும்தான் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாகத் தேர்வு செய்து கொண்டிருக்கிறோம். ஏனென்றால் P.G.–ஆசிரியர்களுக்கு demand இருக்கிறது. நாம் எதிர்பார்த்த அளவுக்கு P.G. ஆசிரியர்கள் நமக்குக் கிடைப்பதில்லை. ஆகவே ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாகத் தேர்வு செய்கின்றோம். மீதி ஆசிரியர்களைக் கள்ளர் சமுதாயத்திலே இருந்துதான் நாம் எடுக்கின்றோம்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 167, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜகுமார், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

167—

பொது நூலகம்

***116997—திரு. எஸ். ராஜகுமார்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—